# ஜெயங்கொண்டம் நகராட்சி



## 2020–2021 ம் ஆண்டிற்கான

# நிர்வாக அறிக்கை

# மன்றப்பொருள்

ஜெயங்கொண்டம் நகராட்சியின் 2020-2021ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு பதிவு செய்யலாம்.

| | |
|---|---|
| ஆணையாளர் | தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் |
| ஜெயங்கொண்டம் நகராட்சி | ஜெயங்கொண்டம் நகராட்சி |

//உண்மை நகல்//

நகர் மன்ற தீர்மான எண். நாள் :

# ஜெயங்கொண்டம் நகராட்சி
# 2020 – 2021 ம் ஆண்டு நிர்வாக அறிக்கை

## நகரம் பற்றி

- அரியலூர் மாவட்டத்தின் இரண்டாவது பெரிய நகரம் ஜெயங்கொண்டமாகும். இந்நகரம் ஏற்கனவே பெரம்பலூர் மாவட்டத்தில் இணைந்திருந்த போது மேற்கில் மிக அதிய மக்கள் தொகை கொண்ட நகரமாக திகழ்ந்தது. இந்நகரம் வடக்கில் 11.218143 டிகிரி அட்ச ரேகையிலும் கிழக்கில் 79.367897 டிகிரி தீர்க ரேகையிலும் அமைந்துள்ளது. கடல் மட்டத்திலிருந்து 65 மீட்டர் உயரத்தில் அமைந்திருக்கிறது.
- இந்நகரிலிருந்து சுமார் 8 கி.மீ. தொலைவில் ராஜராஜ சோழன் மகன் ராஜேந்திர சோழனால் கங்கை கொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் ஆலயம் கட்டப்பட்டு பதினொன்றாம் நுற்றாண்டின் நடுவில் இதனை முதலாம் ராஜேந்திர சோழன் தனது தலைநகரமாக ஆக்கினார். மேலும் பதிமூன்றாம் நுற்றாண்டு வரை சோழர்களின் தலைநகரமாக விளங்கியது. இது உலகப் புகழ்பெற்ற சுற்றுலா தலமாகும். தற்போது இந்தியாவின் தொல்பொருள் ஆய்வு கங்கைகொண்டசோழபுரம் கோவிலில் அகழ்வாராய்சியை மேற்கொண்டுள்ளது. மேலும் , மாளிகைமேடு என்னும் இடத்தில் சோழர்கால அரண்மனை அகழ்வாராய்ச்சி நடைபெற்று வருகின்றது. இவை தமிழ்நாடு சுற்றுலாத் துறையால் புகழிடமாக விளங்கப்படுகின்றது.
- இந்நகரின் வழியாக கும்பகோணம், சென்னை, திருச்சி, அரியலூர், விருத்தாசலம், சிதம்பரம் ஆகிய மாநில நெடுந்சாலைகள் செல்கின்றன.



**கங்கை கொண்ட சோழபுரம் பிரகதீஸ்வரர் ஆலயம்**

## வெப்பநிலை

- இந்நகரத்தின் அதிகபட்ச வெப்பநிலை 80 டிகிரி சென்டிகிரேடாகவும் குறைந்த பட்ச வெப்பநிலை 101 டிகிரி சென்டிகிரேடாகவும் உள்ளது.

## மழை வீழ்ச்சி

- ஆண்டுக்கு சராசரியாக 16 மி.மீ முதல் 22 மி.மீ வரை மழை பெறுகிறது. வட கிழக்கு பருவமழை காலங்களில் இந்நகரமானது அதிக மழை அளவைப் பெறுகின்றது.

## 1. அமைப்பும் மேலாட்சியும் ஆட்சி முறை

அ) இந்நகராட்சி கீழ்கண்டவாறு தோற்றுவிக்கப்பட்டு 2ம் நிலை நகராட்சியாக தற்போது செயல்பட்டு வருகிறது.

| அரசாணை எண். மற்றும் நாள் | நிலை | முதல் |
|---|---|---|
| பேரூராட்சிகளின் இயக்குனர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்:3603/2002 சி–1 நாள்:18.6.2004. | மூன்றாம் நிலை | **18.06.2004** |
| அரசாணை (நிலை) எண்.154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.09.08.2010 | இரண்டாம் நிலை | **09.08.2010** |

இந்நகராட்சி எல்லைக்குள் கீழ்க்கண்ட வருவாய் கிராமங்கள் உள்ளன.

1. 46 ஜெயங்கொண்டம் வருவாய் கிராமம்

    1. செங்குந்தபுரம்
    2. மேலக்குடியிருப்பு
    3. மலங்கன்குடியிருப்பு

2. 45 அங்கராயநல்லூர் பகுதி வருவாய் கிராமம்

    1. கரடிகுளம்.

3. 30 கல்லாத்தூர் (பகுதி) வருவாய் கிராமம்

    1. மகிமைபுரம்
    2. கொம்மேடு
    3. கீழக்குடியிருப்பு

4. 31 பிராஞ்சேரி (பகுதி) வருவாய் கிராமம்

    1. மணக்கரை

5. 43 பெரியவளையம் (பகுதி) வருவாய் கிராமம்

    1. சின்னவளையம்.

நகராட்சியின் பரப்பளவு 28.49 சதுர கிலோ மீட்டர் ஆகும். அறிக்கை ஆண்டில் நகர எல்லையில் மாற்றம் ஏதுமில்லை.

| மக்கள் தொகை விபரம் | |
|---|---|
| 1991ம் ஆண்டு | **28227** |
| 2001ம் ஆண்டு | 31268 |
| 2011ம் ஆண்டு | 33945 |

## 2. தேர்தல்

1991ம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 28227 ஆகும். இதனடிப்படையில் அரசாணை நிலை எண்.154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.18.06.2004ல் இந்நகராட்சிக்கு நகரமன்ற உறுப்பினர் வார்டுகள் எண்ணிக்கை 21 என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அரசாணை நிலை எண்.87, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.07.09.2006ன்படி கீழ்கண்ட விவரப்படி வார்டுகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (பொது) | 2 |
| ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (பெண்கள்) | 2 |
| பெண்கள் (பொது) | 5 |
| ஆண்கள் (பொது) | 12 |

## 3. நகரமன்றம்

**25.10.2016** வரை நகர்மன்றம் செயல்பட்டு வந்தது. தற்போது ஆணையாளர் தனிஅலுவலர் நகர்மன்றத்திற்கு பொறுப்பு வகிக்கிறார். அரசாணை (நிலை) எண்**.146,** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்**.24.10.2016.**

## 4. கூட்டங்கள்

**2020–2021**ம் ஆண்டு தனி அலுவலர் அவர்களால் நடைபெற்ற நகரமன்ற கூட்டத்தின் விவரங்கள் கீழ்கண்டவாறு.

| வ எண் | கூட்டம் நடைபெற்ற தேதி | நகரமன்ற கூட்ட விபரம் | மன்ற பொருள்களின் எண்ணிக்கை | | |
|---|---|---|---|---|---|
| | | | சாதாரண கூட்டம் | அவசர கூட்டம் | சிறப்பு கூட்டம் |
| 1. | 30.04.2020 | சாதாரணக் கூட்டம் | 7 | - | - |
| 2. | 29.05.2020 | சாதாரணக் கூட்டம் | 34 | - | - |
| 3. | 01.06.2020 | அவசரக் கூட்டம் | - | 1 | - |
| 4. | 16.06.2020 | அவசரக் கூட்டம் | | 1 | - |
| 5. | 30.06.2020 | சாதாரணக் கூட்டம் | 1 | - | - |
| 6. | 10.07.2020 | அவசரக் கூட்டம் | - | 1 | - |
| 7. | 15.07.2020 | அவசரக் கூட்டம் | - | 1 | - |
| 8. | 31.07.2020 | சாதாரணக் கூட்டம் | 3 | - | - |
| 9. | 25.08.2020 | அவசரக் கூட்டம் | - | 3 | - |
| 10. | 15.09.2020 | அவசரக் கூட்டம் | - | 1 | - |
| 11. | 30.09.2020 | சாதாரணக் கூட்டம் | 3 | - | - |
| 12. | 28.10.2020 | சாதாரணக் கூட்டம் | 12 | - | - |
| 13. | 10.11.2020 | அவசரக் கூட்டம் | - | 8 | - |
| 14. | 18.11.2020 | சாதாரணக் கூட்டம் | 7 | - | - |
| 15. | 14.12.2020 | சாதாரணக் கூட்டம் | 22 | - | - |
| 16. | 27.01.2021 | சாதாரணக் கூட்டம் | 18 | - | - |
| 17. | 25.02.2021 | சாதாரணக் கூட்டம் | 7 | - | - |
| மொத்தம் | | | 114 | 16 | - |

## 2020 – 2021

1) சாதாரண கூட்டம் – முறை நடைபெற்றது. அதில் பொருள் வைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

2) அவசரக்கூட்டம் – 4 முறை நடைபெற்றது. அதில் 13 பொருள் வைக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

3) சிறப்புக்கூட்டம் நடைபெறவில்லை.

அறிக்கையாண்டில் சட்டப்படி அமைந்த குழுக்களுக்கு நடைபெற்ற கூட்டங்களில் கீழ்கண்ட விவரப்படி பொருள்கள் முடிவு செய்யப்பட்டது.

| வ எண் | குழுக்கள் | கூட்ட எண் | முடிவு செய்யப்பட்ட பொருள்கள் |
|---|---|---|---|
| 1 | நியமனக்குழு | 1 | 2 |
| 2 | ஒப்பந்தக்குழு | – | – |
| 3 | உள்ளூர் திட்டக்குழு | – | – |
| 4 | வரி மேல்முறையீட்டுக் குழு | – | – |

## 5. இயங்கும் அலுவலர்கள்

### அ. ஆணையாளர்

அறிக்கையாண்டில் கீழ்கண்ட விபரப்படி இந்நகராட்சி ஆணையாளர்களாக பணிபுரிந்துள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| 1 | 01.04.2020 முதல் 25.10.2020 முடிய | திருமதி.G.அறச்செல்வி,M.E., நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையர்(பொ). |
| 2. | 26.10.2020 முதல் 31.03.2021 வரை. | செல்வி.D.V.சுபாஷினி,M.A., ஆணையர். |

### ஆ. மேலாளர்

அறிக்கையாண்டில் கீழ்கண்ட விபரப்படி இந்நகராட்சி மேலாளர்களாக பணிபுரிந்துள்ளார்கள்.

| | | |
|---|---|---|
| 1 | 01.04.2020 முதல் 31.03.2021 முடிய | திரு.செ.தனராஜ், மேலாளர்(பொ) |

### இ. கணக்கர்

இந்நகராட்சியில் கணக்கராக செல்வி.க.சாவித்திரி இளநிலை உதவியாளர் பணிபுரிந்து வருகிறார்.

### ஈ. இதர பணியாளர்கள் விபரம்

அறிக்கையாண்டில் கீழ்கண்ட விபரப்படி இந்நகராட்சி பணியாளர்கள் பணிபுரிந்துள்ளார்கள்.

பொதுப்பிரிவு

| வ எண் | பணியிடங்கள் விபரம் | மொத்த பணியிடங்கள் | அறிக்கை ஆண்டில் பணிபுரிபவர்கள் | காலி பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | ஆணையர் | 1 | 1 | – |
| 2 | மேலாளர் | 1 | – | 1 |
| 3 | உதவியாளர் | 1 | 1 | – |
| 4 | புள்ளிவிபரக் குறிப்பாளர் | 1 | 1 | – |
| 5 | இளநிலை உதவியாளர்கள் | 3 | 2 | 1 |
| 6 | பதிவறை எழுத்தர் | 1 | – | 1 |
| 7 | அலுவலக உதவியாளர் | 1 | 1 | – |
| கூடுதல் | | 9 | 6 | 3 |

பொறியியல் பிரிவு

| வ எண் | பணியிடங்கள் விபரம் | மொத்த பணியிடங்கள் | அறிக்கை ஆண்டில் பணிபுரிபவர்கள் | காலி பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | பொறியாளர் | 1 | 1 | – |
| 2 | பொதுப்பணி மேற்பார்வையாளர் | 1 | 1 | – |
| 3 | பணி ஆய்வர் | 1 | – | 1 |
| 4 | மின்பணியாளர் | 1 | 1 | – |
| 5 | மின்பணி உதவியாளர்கள் | 2 | 1 | 1 |
| 6 | பிட்டர் | 3 | 2 | 1 |
| 7 | மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் மற்றும் காவலர் | 10 | 8 | 2 |
| 8 | ஓட்டுநர் | 2 | 2 | – |
| 9 | வாரச்சந்தை காவலர் | 1 | – | 1 |
| கூடுதல் | | 22 | 16 | 6 |

நகரமைப்பு பிரிவு

| வ எண் | பணியிடங்கள் விபரம் | மொத்த பணியிடங்கள் | அறிக்கை ஆண்டில் பணிபுரிபவர்கள் | காலி பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | நகரமைப்பு ஆய்வர் | 1 | – | 1 |
| கூடுதல் | | 1 | – | 1 |

வருவாய் பிரிவு

| வ எண் | பணியிடங்கள் விபரம் | மொத்த பணியிடங்கள் | அறிக்கை ஆண்டில் பணிபுரிபவர்கள் | காலி பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | வருவாய் ஆய்வர் | 1 | – | 1 |
| 2 | வருவாய் உதவியாளர்கள் | 3 | 3 | – |
| கூடுதல் | | 4 | 3 | 1 |

பொதுசுகாதார பிரிவு

| வ எண் | பணியிடங்கள் விபரம் | மொத்த பணியிடங்கள் | அறிக்கை ஆண்டில் பணிபுரிபவர்கள் | காலி பணியிடங்கள் |
|---|---|---|---|---|
| 1 | சுகாதார ஆய்வர் | 1 | 1 | – |
| 2 | துப்புரவு மேற்பார்வையாளர் | 2 | 1 | 1 |
| 3 | துப்புரவு பணியாளர்கள் | 25 | 20 | 5 |
| கூடுதல் | | 28 | 22 | 6 |
| மொத்த கூடுதல் | | 64 | 47 | 17 |

## 6. நிர்வாக செலவினம்

கீழ்க்கண்ட விபரப்படி பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் ஒய்வூதிய செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது.

| இனம் | 2019 – 20 | 2020 – 2021 |
|---|---|---|
| பொது, பொது சுகாதாரம் மற்றும் துப்புரவு பணியாளர்கள் | 404.25 | 586.81 |
| குடிநீர் விநியோக பணியாளர்கள் | 74.79 | 55.39 |
| ஒய்வூதிய செலவினங்கள் | – | – |
| மொத்தம் | 479.04 | 642.20 |

## 7. பொறியியல் பிரிவு

பொறியியல் பிரிவில் 01.04.2020 முதல் 26.02.2021 முடிய திருமதி.G.அறச்செல்வி , மற்றும் திருமதி.V.சித்ரா 27.02.2021 முதல் 31.03.2021 முடிய நகராட்சிப் பொறியாளராக பணிபுரிந்துள்ளார்கள்.

01.04.2020 முதல் 31.03.2021 முடிய திரு.எம். இராமகிருஷ்ணன் பொதுப்பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்துள்ளார்.

இத்துறையில் கீழ்க்கண்ட பணியாளர்கள் பணிபுரிகிறார்கள்.

1. பிட்டர் – 2
2. நீர்த்தேக்க தொட்டி காவலர் – –
3. குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி இயக்குபவர் மற்றும் காவலர் – 8

## 8. சாலைகள் விபரம்

| வ எண் | சாலைகளின் தன்மை | கிலோ மீட்டர் |
|---|---|---|
| 1 | சிமெண்ட் சாலைகள் | 7.674 |
| 2 | தார் சாலைகள் | 45.438 |
| 3 | மெட்டல் சாலைகள் (WBM) | 0.500 |
| 4 | மண் சாலைகள் | 22.980 |
| 5. | Paver Block | 0.880 |
| மொத்தம் | | 77.472 |

## 9. (I). சென்ற ஆண்டு அரசிடமிருந்து பெறப்பட்ட மான்யம் அறிக்கையாண்டில் செலவு விபரம் பின்வருமாறு:–

### 15வது மத்திய நிதிக்குழு திட்டம் :-

2020 – 21 நிதியின் கீழ் நகர்மன்ற தீர்மானம் எண்.264 முதல் 271 வரை நாள்.14.12.2020 ன் படி 15th CFC Grant ரூ. 60.60 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள 06.01.2021 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்றுவருகிறது.

| வ.எண். | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|
| 1 | Shredder இயந்திரம் – 1 எண்ணிக்கை கொள்முதல் செய்தல். | 5.00 |
| 2 | Balling இயந்திரம் – 1 எண்ணிக்கை கொள்முதல் செய்தல். | 5.00 |
| 3 | Incinertor இயந்திரம் – 1 எண்ணிக்கை கொள்முதல் செய்தல். | 10.00 |
| 4 | செல்வபுரம் பகுதியில் ஆழ்குழாய் கிணறு மற்றும் மோட்டார் பம்ப் அமைத்தல். | 10.00 |
| 5 | செல்வபுரம் பகுதியில் மோட்டார் அறை மற்றும் குடிநீர் பகிர்மானக் குழாய் அமைத்தல். | 5.00 |

| | | |
|---|---|---|
| 6 | குஞ்சிதபாதபுரம் பகுதியில் ஆழ்குழாய் கிணறு மற்றும் மோட்டார் பம்ப் அமைத்தல். | 10.00 |
| 7 | குஞ்சிதபாதபுரம் பகுதியில் மோட்டார் அறை மற்றும் குடிநீர் பகிர்மானக் குழாய் அமைத்தல். | 5.60 |
| 8 | சூமலக்குடியிருப்பு திரௌபதை அம்மன் கோவில் பகுதியில் ஆழ்குழாய் கிணறு மற்றும் மோட்டார் பம்ப் அமைத்தல். | 10.00 |
| | **கூடுதல்** | **60.60** |

**(II). 2020 – 21 ஆம் ஆண்டில் சாலைகள் மேம்பாடு செய்வதற்கான அரசால் ஒதுக்கிடு செய்யப்பட்ட திட்டங்கள்.**

| **வ.எண்** | **திட்டத்தின் பெயர்** | **சிப்பம் ( எண்ணிக்கை)** | **மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில் )** |
|---|---|---|---|
| 1 | தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) | 1 | 200.00 |
| 2 | ஒருங்கிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுத்திட்டம் (IUDM) | 5 | 942.50 |
| 3 | சிறப்பு சாலைகள்திட்டம் (SRP) | **3** | 600.00 |
| | | **கூடுதல்** | **1742.50** |

## 10. <u>குடிநீர் விநியோகம்</u>

இந்நகராட்சியில் குடிநீர் விநியோகம் பொறியாளர் மற்றும் பொதுப் பணி மேற்பார்வையாளர்களின் கீழ் இரண்டு பிட்டர் நிலை 2 பணியாளர்கள் மற்றும் சில்லரை செலவின பணியாளரை கொண்டு சிறப்பான முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

**<u>இந்நகராட்சிப் பகுதியில் கீழ்குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் மோட்டாருடன் கூடிய குடிநீர் வழங்கும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் உள்ளன:–</u>**

| **வ.எண்** | **மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி உள்ள இடம்** | **கொள்ளளவு** |
|---|---|---|
| 1 | சிதம்பரம் சாலை | 100000 |
| 2 | சின்னவளையம் | 100000 |
| 3 | காந்தி நகர் | 100000 |
| 4 | காமராஜபுரம் | 100000 |
| 5 | கரடிகுளம் | 100000 |
| 6 | கீழக்குடியிருப்பு | 100000 |
| 7 | மகிமைபுரம் இருளர் தெரு | 10000 |
| 8 | மலங்கன்குடியிருப்பு | 60000 |
| 9 | மணக்கரை | 30000 |
| 10 | மணக்கரை பள்ளர் தெரு | 30000 |
| 11 | மணக்கரை உபதேசியர் தெரு | 10000 |
| 12 | மேலக்குடியிருப்பு | 100000 |
| 13 | அண்ணாசிலை அருகில் | 600000 |
| 14 | பாப்பாங்குளம் | 100000 |
| 15 | செங்குந்தபுரம் | 100000 |
| 16 | செங்குந்தபுரம் (பொன்விழா ஆண்டு) | 60000 |
| 17 | வேலாயுத நகர் | 100000 |
| 18 | வாரச்சந்தை | 100000 |
| 19 | சின்னவளையம் (IUDM) | 100000 |

| | | |
|---|---|---|
| 20 | காமராஜபுரம் (வடக்குத் தெரு) | 100000 |
| 21 | வேலாயுத நகர் (IUDM) | 100000 |

இந்நகராட்சியில் கொள்ளிடம் கூட்டுக் குடிநீர் திட்டம் மற்றும் உள்ளூர் குடிநீர் ஆதாரங்களான ஆழ்குழாய் கிணறுகள் மூலம் 21 எண்ணிக்கையிலான மேல்நிலை நீர் தேக்கத் தொட்டிகளில் குடிநீர் ஏற்றப்பட்டு நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 90 லிட்டர் வீதம் தினசரி 1.5 மணி நேரம் பாதுகாப்பான குடிநீர் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேலும் குடிநீரின் தரத்தை ( Chlorination ) மூலம் கண்காணிக்கப்பட்டு வருகின்றது.

## 11. தெரு விளக்கு வசதிகள்

இந்நகராட்சியால் 21 வார்டுகளிலும் பராமரிக்கப்பட்டு வந்த 1987 எண்ணிக்கையிலான தெருவிளக்குகளை பராமரித்திட M/s.சபரி எலக்ட்ரிக்கல்ஸ், சென்னை, நிறுவனத்தினருக்கு ESCO திட்டத்தின் கீழ் தெரு விளக்கு மின் பராமரிப்பு பணிகளுக்கு 02.01.2018 ஆம் தேதி வேலை உத்தரவு வழங்கப்பட்டு பராமாரிப்பு பணிகள் செய்யப்பட்டுகிறது.

## 12. நகரமைப்பு

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சி நகரமைப்பு ஆய்வர் பணியிடம்-1 காலியாக உள்ளது.

## 13. கட்டிட அனுமதி

தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர் நல வாரியம், சென்னை–34க்கு இந்நகராட்சியில் வழங்கப்படும் கட்டிட அனுமதி 105 நபர்களுக்கு வழங்கப்பட்டு பெறப்பட்ட தொழிலாளர் நலநிதி தொகை வங்கி வரைவோலையாக வசூலிக்கப்பட்டு மேற்படி நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டு வருகிறது.

## 14. பொது சுகாதாரம்.

1. துப்புரவு ஆய்வர் – 1
2. துப்புரவு பணி மேற்பார்வையாளர் – 2ல் (1பணியிடம் காலியாக உள்ளது)
3. டிராக்டர் ஒட்டுநர் – 1
4. துப்புரவு பணியாளர் – 25ல் (5பணியிடம் காலியாக உள்ளது)

## 15. தூய்மை இந்தியா திட்டம் :-

திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2015 – 16 ன் கீழ் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ந.க.எண். 30319/P3/2015 நாள். 21/07/2015 ன் படி ரூ. 1024.10 லட்சம் நிதி ஒதுக்கீட்டில் ( SBM grant 20%, State Fund 7%, Specisal SWM fund 63% ULB Share 10%) கலவை உரக்கிடங்கு அமைக்கும் பணிக்கு உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| உரக்கிடங்கு | :: | 1 |
| பரப்பளவு | :: | 4.20.0 ஹெக்டேர் |
| தொலைவு | :: | 4.00 கி.மீ. |
| தினசரி சேகரம்ஆகும் கழிவுகளின் அளவு | :: | 11.00 மெட்ரிக் டன் |

## 16.திடக்கழிவு மேலாண்மை

இந்நகராட்சியில் **21** வார்டுகளில் வீட்டுக்கு வீடு சென்று குப்பை சேகரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. சேகரிக்கப்படும் குப்பைகளை டாடா ஏசி மற்றும் டிப்பர் லாரிகள் மூலம் நகராட்சி உரக்கிடங்கிற்கு எடுத்து சென்று பிளாஸ்டிக் பொருட்கள் தனியாக பிரித்து எடுக்கப்பட்டு வருகிறது. விற்பனைக்கு இயலாத நெகிழிப் பொருட்கள் Ultratech நிறுவனத்திற்கு அனுப்பப்படுகின்றது.

## 17. கொசு ஒழிப்பு

ஒப்பந்த அடிப்படையில் கொசு ஒழிக்கும் பொருட்டு நகர் முழுவதும் புகையான் **(Fogging Machine)** மருந்து அடிக்கப்பட்டது. சாக்கடையின் மூலம் கொசு புழு உற்பத்தி ஆகாமல் தடுக்க சாக்கடைகள் சுத்தம் செய்யப்பட்டு தினசரி **(Anti larval control Unit)** பணி மூலம் மருந்து அடிக்கப்பட்டு வருகிறது. **Anti larval Work –** கால்வாய் துப்புரவு பணி சிறப்பாக செயல்பாட்டில் உள்ளது. இந்நகராட்சியில் டெங்கு காய்ச்சல் ஏற்படுவதை தடுக்க, பொது மக்கள் அறியும் வண்ணம் விழிப்புணர்வு பேரணி நடத்தப்பட்டது. பள்ளி மாணவர்களுக்கு நோயினால் ஏற்படும் விபரீதம் மற்றும் அதனை தடுக்கும் விதம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. துண்டு பிரசுரம் மூலம் பொது மக்களுக்கு விளம்பரம் செய்யப்பட்டது. சிறப்பு களப்பணியாளர்கள் நியமித்து வீடுவீடாக சென்று கொசு உற்பத்தியாகும் உரல், தொட்டி, டயர், குளிர் சாதனபெட்டி போன்றவற்றில் உள்ள நீரை அப்புறப்படுத்தி நோய் பரவாமல் தடுக்கப்பட்டது. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 21 வார்டுகளிலும் 44 டெங்கு ஒழிப்பு பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படை மூலம் குடிநீர் தொட்டி, பானை போன்றவற்றில் டெமோபாஸ் மருந்து தெளிக்கப்பட்டு நோய் கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது.

### 18.பணியாளர் நலம்

துப்புரவு ஊழியர்களுக்கு நடப்பு நிதியாண்டிற்கான சீருடைகள் கையுறை, காலுறை, முகவுரை மற்றும் மழை கோட்டு மற்றும் காலணிகள் வாங்கி வழங்கப்பட்டது. துப்புரவு பணியாளர்களுக்கு மருத்துவ முகாம் நடத்தி அவர்களின் உடல்நலம் சத்தான உணவு வகைகளும் வழங்கப்பட்டு வருகின்றது.

## 19.சாக்கடை புதைச் சாக்கடை

இந்நகராட்சியில் புதை சாக்கடை இல்லை. நகரில் உள்ள கழிவுநீர் சாக்கடை நீர் அப்புறப்படுத்தி கொசு மருந்து அடிக்கப்படுகிறது.

## 20.ஆதி திராவிடர் நலம்

ஆதி திராவிடர்/ பழங்குடியினர், ஈமச்சடங்கு தொகை நபர் ஒருவருக்கு ரூ.**2500/-** விகிதம் 24 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## 21.ஆபத்தானதும் மற்றும் அருவருக்கத்தக்கதும்

இந்த அறிக்கையாண்டில் தொழிற்சாலைகள், உணவு விடுதிகள், இதர வியாபாரங்கள் முதலியவற்றிற்கு உரிமம் வழங்கப்பட்டு நடப்பு ஆண்டில் ரூ.0.80 வசூல் செய்யப்பட்டுள்ளது. இத்தலைப்பின் கீழ் வழக்கு எதுவும் நிலுவையில் இல்லை. முந்தைய வழக்கும் எதுவும் நிலுவையில் இல்லை.

உணவு பாதுகாப்பு அலுவலர் மற்றும் துப்புரவு ஆய்வர் அவர்களின் ஆய்வின்போது நாள்பட்ட உணவு ஸ்டாக்குகள், கெட்டுப்போன உணவு பொருள்கள் மற்றும் நெகிழிப் பொருட்கள் பறிமுதல்

செய்யப்பட்டு எரிக்கப்பட்டு புதைக்கப்பட்டது. உரிமம் இல்லாத உணவு பொருள்கள், லேபிள் இல்லாத உணவு பொருள்கள் விற்பனைக்கு தடை செய்யப்பட்டது.

## 22. வருவாய் பிரிவு.

வருவாய் உதவியாளர்கள் ஒரு வருவாய் ஆய்வரின் மேற்பார்வையில் தொடர்ந்து பணியாற்றி வந்துள்ளனர். இந்நகராட்சியில் 3 வருவாய் உதவியாளர் பணியிடம் உள்ளது. அறிக்கையாண்டில் 3வருவாய் உதவியாளர்களும் பணியாற்றியுள்ளார்கள்.

வசூலிக்கப்படும் சொத்துவரியினை கீழ்க்கண்ட விபரப்படி பிரித்து கணக்கிடப்பட்டு வருகிறது.

| வ. எண் | நிதியின் விபரம் | கணக்கீடு செய்யப்பட்ட விபரம். |
|---|---|---|
| 1 | பொதுநிதி | 7 % |
| 2 | கல்வி நிதி | - |
| 3 | குடிநீர் மற்றும் வடிகால் நிதி | 3 % |
| | | 1 % |
| 4 | நூலக வரி | ரூபாய் ஒன்றுக்கு 10பைசா மட்டும் |

## 23.பொது சொத்துவரி சீராய்வு

நகராட்சிகளின் சொத்துவரியினை 01.04.2008 முதல் சீராய்வு செய்து திருத்தி அமைப்பது குறித்து சென்னை, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் 12.11.2007ம் தேதிய அரசாணை (நிலை) எண்.150, அதனைத் தொடர்ந்து அரசு செயலாளர் அவர்களின் 01.02.2008ம் தேதிய கடித எண்.38279/தேர்தல்/2006-2ல் வெளியிடப்பட்டுள்ள வழிகாட்டுதல் நடைமுறைகள் மற்றும் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் அரசாணை நிலை எண்.40, நாள்.22.06.2008ன் படியும், புதிய மண்டல மதிப்புக்கள் நிர்ணயம் செய்தல் ஆகியவை நகர்மன்ற தீர்மான எண்.205, நாள்.29.08.2008 மற்றும் நகர்மன்ற தீர்மானத்தின் படியும் மற்றும் அரசாணையில் கண்டுள்ளபடி சொத்துவரி சீராய்வு கீழ்கண்டவாறு மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டு அதன்படி 2008-2009 முதல் அரையாண்டிற்கு சொத்துவரி சீராய்வு செய்யப்பட்டது.

1920 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் அட்டவணை 4 விதி 6(அ)ன்படி சொத்துவரி விதிப்பக தொடர்பாக உரிய வழிமுறைகளை வகுக்க நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டு உள்ளது சென்னை நகராட்சிகளின் நிர்வாக ஆணையர் சுற்றறிக்கை எண்.60572/98/ நாள்.08.10.1998, 23.10.1998 மற்றும் 3395/06/ஆர்1 நாள் 01.03.2006ன்படி 01.10.1998க்கும் பிறகு கட்டப்பட்ட கட்டிடங்களுக்கு மண்டல மதிப்பு கட்டிட பரப்பளவு மற்றும் பயன்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் சொத்துவரி நிர்ணயம் செய்யப்படும் போது சொந்த குடியிருப்புக் கட்டிடங்களுக்கு 30 சதவீதம் கழிவு அளித்து வரி விதிப்பு செய்யப்பட வேண்டும்.

இந்நிலையில் சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரின் சுற்றறிக்கை எண்.ந.க.எண்.63012/07/ஆர்1 நாள்.20.02.2008ன் படி 01.04.2008 முதல் சொந்த குடியிருப்புக் கட்டிடங்களுக்கு கழிவு அளிக்கப்படாமல் சொத்துவரி நிர்ணயம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 1) | குடியிருப்பு கட்டிடம் | – | முந்தைய வரியில் 10% சதவீதம் உயர்வு. |
| 2) | தொழிற்சாலை கட்டிடங்களுக்கு | – | முந்தைய வரியில் 100% சதவீதம் உயர்வு. |
| 3) | வணிகக் கட்டிடங்கள் | – | முந்தைய வரியில் 50% சதவீதம் உயர்வு. |

ஜெயங்கொண்டம் நகராட்சியை மூன்று பகுதிகளாக பிரித்து கீழ்க்கண்டவாறு அடிப்படை மதிப்பு நிர்ணயிக்கப்பட்டது.

| பகுதி | அடிப்படை மதிப்பு |
|---|---|
| A Zone | Rs.1.00 |
| B Zone | Rs.0.75 |
| C Zone | Rs.0.50 |

### (2) கட்டிட வயதிற்கான கழிவுகள்

| | | |
|---|---|---|
| 5 ஆண்டுகள் வரை | – | கழிவு ஏதும் இல்லை |
| 5 ஆண்டு முதல் 15 ஆண்டு வரை | – | 10 சதவீதம் |
| 15 ஆண்டு முதல் 25 ஆண்டு வரை | – | 15 சதவீதம் |
| 25 ஆண்டுக்கு மேல் | – | 20 சதவீதம் |

## 24.காலிமனை வரி

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறையின் 20.08.2009ம் தேதிய அரசாணை (பல்வகை) எண்.151ல் நகராட்சிகளில் விதிக்கப்படும் காலியிட வரி ஒவ்வொரு நகராட்சியிலும் பலவிதமாக நிர்ணயித்து வசூலிக்கப்பட்டு வருவதால் ஏற்ற தாழ்வுநிலை உள்ளது. இதனை கருத்தில் கொண்டு ஒரே சீரான காலியிட வரி நிர்ணயம் செய்யும் முறையை கடைபிடிக்க வேண்டி தற்பொழுது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள மாநில நிதிக்குழுவின் பரிந்துரையின் 2000ம் ஆண்டின் தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பு விதிகளின் விதி 114ன் பரிந்துரையின்படியும் 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் பிரிவு 81 (3) (2)ல் உரிய சட்ட திருத்தம் கொண்டுவரப்பட்டு அதனை 20.08.2009ம் தமிழ்நாடு அரசிதழில் பிரகடனப்படுத்தி 01.09.2009 முதல் நடைமுறைப்படுத்திட அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

காலிமனை வரி சதுரடி நிர்ணயம் குறைந்தபட்சம் அதிக பட்சம் மதிப்பினை மன்ற தீர்மானத்தின் மூலம் நிர்ணயம் செய்து 01.10.2009 முதல் நடைமுறைப்படுத்திட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

ந.க.எண் 41802/2009/ஆர்1 நாள் 19.03.2010 சுற்றறிக்கை காலிமனை வரி வசூல் செய்வது தொடர்பாக அரசு வழக்கறிநரிடமிருந்து சட்ட ஆலோசனை பெறப்பட்டுள்ளது. அரசு வழக்கறிஞர் வழங்கியுள்ள சட்ட ஆலோசனையில் (Legal Opinion) இந்த அரசு ஆணை (அ.ஆ.எண்.151 நாள். 20.08.2009) நடைமுறைப்படுத்தப்பட்ட தேதிக்கு முன்னர் (அதாவது 01.10.2009) விதிக்கப்படும் காலி மனைகளுக்கான சொத்துவரியானது. முன்னர் கடைப்பிடிக்கப்பட்ட (பத்திரப் பதிவின் மார்க்கெட் மதிப்பு) அரசாணை, வழிமுறைகளின் படிதான் வரி விதிப்பு செய்யப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இந்நகராட்சியை பொறுத்தமட்டில் அரசாணையின்படி சி பிரிவு நிலையில் இரண்டாம் நிலை நகராட்சியாக அமைகிறது. அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சதுரடிக்கான குறைந்தபட்சம் அதிகபட்சம் பைசாவினை கீழ்க் கண்டுள்ள விவரப்படி இந்நகராட்சிக்கு நிர்ணயம் செய்து அதன் அடிப்படையில் காலிமனைவரி சீராய்வு செய்திடவும் இதனை 01.10.2009 முதல் நடைமுறைப்படுத்திடவும் அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் 07.09.2009ம் தேதிய ந.க.எண்.41802/2009/ஆர்1 சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**காலிமனை வரி நிர்ணயிக்க மண்டலம் பிரித்து பைசா மதிப்பு நிர்ணயித்தல்.**

| காலியிடம் அமைந்துள்ள இருப்பிட பகுதி | இந்நகராட்சியின் சாலைகள் மற்றும் தெருக்களின் விபரம் | சி பிரிவு சதுரடிக்கு குறைந்த பட்சம் மன்றம் நிர்ணயிக்கும் (பைசா) |
|---|---|---|
| குடியிருப்பு பகுதிகள் அமைந்துள்ள தெருக்கள் | அ | 0.10 பைசா |
| முக்கிய சாலைகள் மற்றும் பிரதான சாலைகளுக்கு இட்டுச் செல்லும் பேருந்து வழித்தட சாலைகள் அல்லாதவை | ஆ | 0.20 பைசா |
| முக்கிய சாலைகள் மற்றும் பிரதான சாலைகளுக்கு இட்டுச் செல்லும் பேருந்து வழித்தட சாலைகள் | இ | 0.30 பைசா |

## (3) சொந்த குடியிருப்புகள்

### கட்டிடத்தின் தன்மை

| | | |
|---|---|---|
| கான்கிரிட் கட்டிடங்கள் | – | கழிவு ஏதும் இல்லை |
| ஒரு தகடு ஆஸ்பெஸ்டால் ஆகிய மேற்கூரை கட்டிடங்கள் | – | 25 சதவீதம் |
| கூரை | – | 50 சதவீதம் |

### கட்டிடத்தின் பயன்பாடு

தொழிலக பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் இருமடங்கு அடிப்படை மதிப்பு வணிக பயன்பாட்டிற்கான கட்டிடங்கள் நர்சிங் ஹோம்கள் / கல்யாண மண்டபம் போன்றவை மும்மடங்கு அடிப்படை மதிப்பு

### உச்ச வரம்பு

சொத்துவரி செலுத்தவோருக்கு சொத்துவரி உயர்வு மிக அதிகமாக இருக்கக்கூடாது. என்று கருத்தின் அடிப்படையில் சொத்துவரி சீராய்வு திருத்தியதின் பேரில் உயர்த்தப்படும் வரிக்கான உச்ச வரம்பு கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1. குடியிருப்பு கட்டிடங்கள் சொத்துவரி சீராய்வுக்கு முன்பு இருந்த (கட்டிட உரிமையாளர் பயன்பாடு) வரியில் 10 சதவீதம் மிகாமல்.
2. குடியிருப்பு கட்டிடங்கள் (வாடகைக்கு விடப்பட்டவை) முந்தை வரியில் 50 சதவீதம் மிகாமல்.
3. வணிக பயன்பாடு கட்டிடங்கள் முந்தைய வரியில் 100 சதவீதம் மிகாமல்.
4. தொழிலக பயன்பாடு கட்டிடங்கள் முந்தைய வரியில் 150 சதவீதம் மிகாமல்.

சொத்துவரி சென்ற ஆண்டு முடிய 12339 எண்ணிக்கை வரிவிதிப்புகள் ஆகும். நடப்பாண்டு முடிவில் 12552 எண்ணிக்கை வரிவிதிப்புகள் ஆகும். 2020-2021ம் ஆண்டில் ரூ.102.82 இலட்சம் நடப்பு கேட்பு எழுப்பப்பட்டு அதில் ரூ.69.60 இலட்சம் வசூலிக்கப்பட்டுள்ளது. 2020-2021 ஆண்டின் நிலுவை கேட்பு தொகை ரூ.30.82 இலட்சம் அதில் வசூல் தொகை **ரூ.7.39** லட்சம் ஆகும்.

அரசு கட்டிடங்கள் சொத்துவரி நிலுவை 13.87 வசூல் 0.43 நடப்பு 6.21 வசூல் 2.41 செய்யப்பட்டது.

## 25.தொழில் வரி

தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, பிரிவு 124டி மற்றும் வர்த்தகம், தொழில் மற்றும் வேலைவாய்ப்பு ஆகியவற்றிற்கு தொழில்வரி வசூல் செய்யும் விதிகள் 1999 விதி 16-ன்படி, ஜெயங்கொண்டம் நகராட்சியில் ஏற்கனவே வசூலிக்கப்பட்டு வரும் தொழில் வரியினை 01.10.2018 முதல் (2018-19 இரண்டாம் அரையாண்டு முதல்) 25% உயர்வு செய்திட செயங்கொண்டம் நகராட்சி தீர்மான எண்.09 நாள் 25.05.2018ன்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அதன்படி 01.10.2018 முதல் (2018-19 இரண்டாம் அரையாண்டு முதல்) பின்வருமாறு தொழில்வரி வசூலிக்கப்பட்டு வருகிறது.

| வ. எண் | 6 மாத சராசரி வருமானம் | ஏற்கனவே வசூலிக்கப்பட்ட தொழில்வரி தொகை (ரு) | (25% சதவீகிதம்) 01.10.18 முதல் திருத்திய தொழில்வரி தொகை (ரு) |
|---|---|---|---|
| 1 | 21000 வரை | இல்லை | |
| 2 | 21001 முதல் 30000 வரை | 122/- | 160/- |
| 3 | 30001 முதல் 45000 வரை | 310/- | 390/- |
| 4 | 45001 முதல் 60000 வரை | 610/- | 770/- |
| 5 | 60001 முதல் 75000 வரை | 920/- | 1150/- |
| 6 | 75001 மற்றும் அதற்கு மேல் | 1220/- | 1250/- |

தொழில்வரி சென்ற ஆண்டு முடிய 1318 எண்ணிக்கை வரிவிதிப்புகள் ஆகும். நடப்பாண்டு முடிவில் 1320 எண்ணிக்கை வரிவிதிப்புகள் ஆகும். 2020–2021ம் ஆண்டில் ரூ.60.73 இலட்சம் நிலுவை மற்றும் நடப்பு கேட்பாக உள்ளது. அதில் ரூ.20.97 இலட்சம் வசூல் செய்யப்பட்டது. ரூ.39.76 இலட்சம் நிலுவையாக உள்ளது.

## 26.குத்தகை

அரசு ஆணை எண். நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 19.09.2008ன் படி மூன்று ஆண்டுகளுக்கு பேருந்து நிறுத்தங்கள் போன்றவற்றை குத்தகைக்கு விட எடுக்கப்பட்ட நடவடிக்கை விபரம் மன்ற தீர்மான நகல் மற்றும் திருத்திய குத்தகை நிபந்தனைகள் விபரம்.

- அரசாணையை மன்ற பதிவுக்கு வைக்கப்பட்டு மன்றம் தீர்மானத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

- அரசாணைப்படி ஓராண்டு குத்தகை இனத்தினை மூன்றாண்டு குத்தகை இனமாக மாற்றி தீர்மானம் அனுமதிக்கப்பட்டுள்ளது.

## சந்தைகள், மீன்மார்கெட், ஆடு, மாடு வதை செய்யும் இடங்கள்.

இந்நகராட்சியில் பிரதி வாரம் திங்கள் கிழமையில் வாரச்சந்தையும் மற்றும் தினசரி மார்கெட்டும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகரத்தில் 9 ஆடு இறைச்சி கடைகளும் 4 மாட்டு இறைச்சி கடைகளும் , மீன் மார்கெட் ஒன்றும் உள்ளன.

## கடந்த மூன்று ஆண்டுகளில் கிடைத்த வருமானம் விபரம்

| வ. எண் | கணக்கு எண் | விபரம் | 2018-2019 | | 2019-2020 | | 2020-2021 | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | கேட்பு | வசூல் | கேட்பு | வசூல் | கேட்பு | வசூல் |
| | | | ரூ. இலட்சத்தில் | | | | | |
| 1 | 1022 | வாரச்சந்தை | 15.10 | - | 15.85 | 1.26 | 15.85 | - |
| 2 | 1022 | தினசரி மார்க்கெட் குத்தகை | 4.92 | - | 5.16 | 0.41 | 5.16 | - |
| 3 | 1026 | பேருந்து நுழைய சுங்க கட்டணம் (துறை ரீதியான வசூல்) | - | - | - | - | - | - |
| 4 | 1027 | ஆடு, மாடு அறுக்கும் இடம் குத்தகை மற்றும் மீன் மார்கெட் | 3.88 | - | 4.07 | 1.57 | 4.09 | - |
| 5 | 1039 | கட்டண கழிவறை | - | - | - | - | - | - |
| 6 | 1033 | குத்தகை கடை வாடகை | 11.19 | 2.37 | 11.18 | - | 12.86 | - |
| 7 | 1028 | பேருந்து நிலைய சைக்கிள் கட்டணம் | - | - | - | - | - | - |
| 8 | 1035 | காய்கறி கடை மற்றும் வணிக வாளக கடைகள் | 4.80 | 0.94 | 4.80 | - | 5.52 | - |
| மொத்தம் | | | 39.89 | 3.31 | 41.06 | 3.24 | 43.48 | - |

## 27. வழக்குகள்

<u>வருவாய் பிரிவு.</u>

1. பேருந்து நிலைய கடைகள் வழக்கு எண்.OS.No.103 முதல் 129 வரை.
2. சொத்துவரி தொடர்பான வழக்கு எண்.03/2017 முதன்மை மாவட்ட நீதி மன்றம்.

<u>பொதுப் பிரிவு.</u>

1. உயர் நீதிமன்ற வழக்கு எண்.16262/2020

<u>பொறியியல் பிரிவு.</u>

1. திடக்கழிவு மேலாண்மை திட்டம் தொடர்பான வழக்கு எண்.

## 28. பொதுக்கூட்ட இடம்

பொதுக்கூட்டம் நடைபெறுவதற்கு ஏதுவாக சன்னதி தெரு சாலையில் வசதி செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

## 29. தகவல் மையம்

பொது மக்களின் தேவைகளை உடனுடக்குடன் பூர்த்தி செய்வதற்காக நகராட்சி அலுவலகத்தில் தகவல் மையம் செயல்பட்டு வருகிறது.

## 30. வாகனம்

இந்நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு போலிரோ வாகனம் ஒன்று பயன்படுத்தப்பட்டு வருகிறது.

| | | |
|---|---|---|
| ஆரம்ப நிலை குப்பை சேகரிப்பு | :: | மூன்று சக்கர சைக்கிள் – 5 எண்ணிக்கை |
| தள்ளு வண்டிகள் | :: | 26 |
| BOV | : | 12 |
| LCV | | 5 |

| | | |
|---|---|---|
| டிராக்டர் | :: | 1 |
| JCB | :: | 1 |
| கிட்டாச்சி | :: | 1 |
| ரோலர் | :: | 1 |

## 31. கடன்கள் திருப்பி செலுத்த வேண்டிய விபரம்

அரசுக்கு 31.03.2019 முடிய செலுத்த வேண்டிய கடன் தொகை **ரூ.127.21** இலட்சம் நிலுவை உள்ளது. வழி மற்றும் வழிவகைகள் திட்டத்தின் கீழ் எந்த திட்டமும் இல்லை.

## 32. சிறுசேமிப்பு

சிறுசேமிப்பு வசூல் இலக்கு ஏதும் நிர்ணயம் செய்யப்பட வில்லை. முன்னாள் படைவீரர் நல கொடிகள் வழங்கப்பட்டு பொது மக்களிடம் விநியோகிக்கப்படுகின்றன.

## 33. தணிக்கைத் தடைகள்

அறிக்கையாண்டில் முடிவில் இருந்த தணிக்கை தடைகள் **519** ஆகும்.

## 34. நிதி நிலைமை பொது

**2018–2019** ம் ஆண்டு தணிக்கை அறிக்கையின் படி நகராட்சியின் நிதி நிலைமை வருவாய்க்குள் செலவு கட்டுப்படுத்தப்படாத நிலையில் உள்ளது. அறிக்கையாண்டில் வரவு செலவு கீழ்க்கண்டவாறு கொடுக்கப்பட்டுள்ளது.

| வருடம் | வரவு (ரூ.இலட்சத்தில்) | செலவு (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| **2018 – 2019** | **1133.60** | **1154.04** |

## <u>35. அம்மா உணவகம்</u>

அரசாணை (நிலை) எண்.**118,** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.**26.09.2014**ன்படி கூலித்தொழிலாளர்கள் மற்றும் அடித்தட்டு மக்கள் பயன்பெறும் வகையில் சுத்தமான உணவு கிடைக்கும் பொருட்டு மலிவு விலையில் **<u>"அம்மா உணவகம்"</u>** நடத்த ஆணையிட்டுள்ளதன்படி ஜெயங்கொண்டம் நகராட்சி பகுதியில் அண்ணாசிலை அருகே புதியதாக **<u>"அம்மா உணவகம்"</u>** கட்டப்பட்டுள்ளது. **<u>"அம்மா உணவகம்"</u>** நல்லமுறையில் நடைபெறவும், கொள்முதல் மற்றும் விற்பனை ஆகியவற்றை சிறப்பாக மேற்கொள்ளவும் இந்நகராட்சி அலுவலர்களுக்கு பொறுப்புகளும் கடமைகளும் நிர்ணயித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. **<u>"அம்மா உணவகம்"</u>** நல்ல தரமான முறையில் உணவு தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகிறது. **2020-2021**ம் ஆண்டின் அம்மா உணவகத்தின் வரவு **ரூ.3.12 இலட்சம்** செலவு **ரூ.20.85 இலட்சம்** ஆக கணக்கிடப்பட்டுள்ளது.

## <u>36.தெருவோர வியாபாரிகள் (Support to Urban Street Vendors)</u>

இந்நகராட்சியில் மேற்படி திட்டத்தின்கீழ் **2020-2021**ம் ஆண்டில் **247** சாலையோர வியாபாரிகள் **Virtue NGO** மூலமாக கணக்கெடுப்பு செய்யப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவருக்கும் தெருவோர வியாபாரிகளுக்கான அடையாள அட்டை வழங்குவதற்கான புகைப்படங்கள் எடுக்கப்பட்டு, அடையாள அட்டையும் வழங்கப்பட்டுள்ளது. இவர்களுக்குரிய **Committee** அமைக்கப்பட்டு உறுப்பினர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

## 37. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தனிப்பிரிவு மனு.

- நிலுவை இல்லை -

## 38. கோவிட் - 19.

ஜெயங்கொண்டம் நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சி ஆகும். அரசாணை எண். 372 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்: 16.12.2004ல் மூன்றாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வந்தது. அதன்பின்னர் அரசாணை (நிலை) எண். 154 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள். 09.08.2010க்கிணங்க, 09.08.2010 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது இந்நகராட்சி 21 வார்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது. 2011ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி 33945 மக்கள் தொகை உள்ளனர். இந்நகராட்சி 28.49 சதுர கி.மீ பரப்பளவு கொண்டதாகும். இந்நகரில் மொத்தம் 76.680 கி.மீ நீளமுள்ள நகராட்சி சாலைகளும், 8.00 கி.மீ நீளமுள்ள மாநில நெடுஞ்சாலைத் துறை சாலைகளும் மற்றும் 8.00 கி.மீ நீளமுள்ள தேசிய நெடுஞ்சாலைத் துறை சாலைகளும் இதில் **5** பிரதான நுழைவு வாயில்கள் உள்ளன.

- கொரோனா நோய் தொற்று முன்னெச்சரிக்கை நடவடிக்கை பணிகளுக்காக இந்நகராட்சிக்கு சொந்தமான **3** டாடா ஏசிஇ வாகனங்கள், **1** டிராக்டர் வாகனம் ஆகியவைகள் குப்பைகளை அகற்றுவதற்கும், தெருக்களில் சுண்ணாம்பு மற்றும் பிளிச்சிங் பவுடர் தூவுவதற்கும் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது.
- இந்நகராட்சிக்கு சொந்தமான **3** டாடா ஏசிஇ வாகனங்கள் மூலம் கொரோனா நோய் தொற்று குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் ஒலி பெருக்கி மூலம் விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறது.
- இந்நகராட்சி பகுதியில் நான்கு ரோடு மற்றும் பேருந்து நிலையம் பகுதிகளில் ஒலிப்பெருக்கி (Standing Mic) அமைத்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.
- மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்களின் 24.05.2021 அன்று வழங்கிய அறிவுரைகனை கொண்டு மதிப்பிற்குரிய மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மரியாதைக்குரிய மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களால் மேற்கொண்ட நடவடிக்கையின் அடிப்டையில் இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா நோய் தொற்று பரவல் குறைந்து காணப்படுகிறது.
- பொது சுகாதாரப் பணியாளர்கள் – **154** நபர்கள் (நிரந்தரப் பணியாளர்கள் – 20, ஒப்பந்தப் பணியாளர்கள் – 134) இப்பணிகளுக்கு ஈடுபடுத்தப்பட்டு வரப்படுகிறது.
- இந்நகராட்சி மூலம் **15000** எண்ணிக்கை விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் அச்சடிக்கப்பட்டு நகராட்சி தூய்மை இந்தியா பரப்புரையாளர்கள் மற்றும் **44** எண்ணிக்கை டெங்கு கொசு ஒழிப்பு பணியாளர்கள் மூலம் அனைத்து வார்டு பகுதிகளிலும் வீடு வீடாக சென்று வழங்கி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருகிறது.
- இந்நகராட்சி அனைத்து வார்டு பகுதிகளிலும் விழிப்புணர்வு குறித்த விளம்பர பதாகைகள் (Flex Banners) வைக்கப்பட்டுள்ளது.
- அம்மா உணவகம் மற்றும் நகராட்சி அலுவலகம் ஆகிய இடங்களில் கைகளை கிருமி நாசினி கொண்டு சுகாதாரமாக வைத்துக் கொள்ள ஏதுவாக வழிவகை செய்யப்பட்டுள்ளது.
- அம்மா உணவகத்தில் நாள் ஒன்றுக்கு சுமார் **210** ஏழை, எளிய மக்கள், வயதானவர்கள், ஆதரவற்றோர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பு மக்களும் வயிராற உண்ணுவதற்கு

வழிவகை செய்யப்பட்டுள்ளது. மேலும், இதுநாள் வரையில் 15625 பயனாளிகள் பயனடைந்து உள்ளனர்.

- கிருமி நாசினி தெளிக்கும் பணியாளர்களுக்கு பணியாளர்களின் பாதுகாப்பு கருதி முழு கவச உறை (PPE Kit) வழங்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது.
- தனிமைப்படுத்தப்பட்டுள்ள நபர்களின் வீடுகளில் தினசரி சேகரமாகும் குப்பைகளை சேகரிக்கும் பணியாளர்களுக்கு பணியாளர்களின் பாதுகாப்பு கருதி முழு கவச உறை (PPE Kit) வழங்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டு வருகிறது.
- இந்நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட பகுதிகளில் நகராட்சி பணியாளர்கள், வருவாய் அலுவலர்கள் மற்றும் காவல் துறையினை கொண்டு குழு அமைக்கப்பட்டு கீழ்கண்ட பணி.
- முககவசம் அணியாதவர்களுக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. ( முககவசம் அணியாதவர்களுக்கு 200 வீதம் 1304 நபர்களுக்கு 2,60,800, தனி நபர் இடைவெளி கடைப்பிடிக்காதவர்களுக்கு 500 வீதம் 300 நபர்களுக்கு 1,50,000 மற்றும் வணிக வளாகங்களுக்கும் 5000 வீதம் 19 கடைகளுக்கு 95,000 ) அபராதம் வசூல் செய்யப்பட்ட மொத்த தொகை 5,05,800.
- கொரோனா நோய் தொற்று காரணமாக இறந்தவர்களை கண்டறிய குழு அமைக்கப்பட்டு இந்நகராட்சிக்கு சொந்தமான நவீன எரிவாயு தகன மேடையில் பொது மக்களுக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படாத வண்ணம் எரிக்கப்பட்டு வருகிறது.
- கொரோனா பரவல் தடுப்பு நடவடிக்கையாக 24/7 மணி நேரமும் செயல்படும் அவசர கால கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்படுள்ளது.
- இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதியில் 3 கொரோனா நோய் தொற்று மையங்கள் (Corona Case Center) நகராட்சி மூலமாக அமைக்கப்பட்டுள்ளது.
- கொரோனா நோய் தொற்று சிறப்பு முகாம்களில் உள்ள கழிவுகளை அகற்றுதல் மற்றும் கிருமி நாசினி தொளித்தல்.
- கொரோனா தடுப்பு ஊசி 18 வயது முதல் 45 வரை 3130 நபர்கள் மற்றும் 45+ 5450 நபர்களுக்கு மொத்தம் நபர்கள் 8580 தடுப்பு ஊசி போட்டப்படுள்ளது.
- ட்ரோன் (Drone) மூலமாக Garuda Aerospace Pvt.Ltd என்ற நிறுவனத்தின் மூலம் நான்கு ரோடு மற்றும் கொரோனா பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிருமி நாசினி தொளித்தனர்.
- தினசரி கொரோனா நோய் தொற்று சம்பந்தமாக கிருமி நாசினி தொளித்தல் விபரங்களை இணைய வழியில் அனுப்பிவைத்தல்.
- உணவு பார்சல்கள் வாங்குவதற்கு அரசால் அனுமதிக்கப்பட்ட நேரத்தில் மட்டுமே மக்கள் வீட்டை விட்டு வெளியே வர அனுமதிக்கப்படுகின்றன.
- மருத்துவ காரணங்களுக்காக வயது முதிந்தோர் மற்றும் இதர நோயாளிகள் மருத்துமனை செல்வதற்காக மக்கள் வீட்டை விட்டு வெளியே வர அனுமதிக்கப்படுகின்றன.
- கொரோனா தடுப்பு ஊசிகள் செலுத்திக்கொள்ளவும் பரிசோதனை மேற்கொள்ளவும் மருத்துவமுகம்கள் மற்றும் மருத்துவ மனைக்கு செல்கின்றன்ர்.
- நகராட்சி முக்கிய பகுதிகள் தெருக்களில் அரசின் வழிகாட்டுதலின் நெறிமுறைகளை பின்பற்றி குறிப்பிட்ட கால இடைவெளியில் இந்நகராட்சி பணியாளர்களை கொண்டு கிரிமி நாசினி தெளிக்கப்பட்டு வருகின்றது.

- கட்டுபடுத்தப்பட்ட பகுதிகள் நோய்தொற்று ஏற்ப்பட்டு தனிமைபடுத்தப்பட்ட நபர்களின் வீடுகளில் இந்நகராட்சி பணியாளர்களை கொண்டு கிரிமி நாசினி தெளிக்கப்பட்டு வருகின்றது.

- பொதுமக்கள் அத்தியாவசிய தேவையான காறிகறிகள் மற்றும் பழங்கள் விற்பனை செய்வதற்காக நடமாடும் காய்கறி மற்றும் பழங்கள் விற்பனை வாகனங்கள் 21 வார்டுகளில் தனித்தனியாக இயக்கப்பட்டுவருகிறது.

- காவல் துறையினரும் ஆங்காங்கே தடுப்புகள் ஏற்படுத்தி தேவையின்றி வெளியே சுற்றி திரியும் நபர்களை கண்டறிந்து எச்சரித்து வருகின்றனர்.

**பொது குறிப்பு :**

இந்நகராட்சி பொது மக்களுக்கு அடிப்படை தேவைகள் குடிநீர் விநியோகம், விளக்கு வசதி, சாலை வசதி தெருக்களை சுத்தப்படுத்துதல் மற்றும் இதர பொது சுகாதாரப்பணி நல்ல முறையில் அளித்து வருகிறது. அரசினால் வழங்கப்படும் கடன் உதவி தொகைகள், மான்ய தொகைகளை கொண்டு பொதுமக்களின் நலனுக்காக பணிகளை நல்ல முறையில் செய்து கொடுத்துள்ளது.

நகராட்சி நிர்வாகம் செவ்வனே நடைபெற அவ்வப்போது தேவையான ஆலோசனை வழங்கிய நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை–28 அவர்களுக்கும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கும் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் அரியலூர் அவர்களுக்கும் எனது பணிவான நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன.

நகராட்சியின் நிர்வாகம் பொதுவாக நல்லமுறையில் நடைபெற ஒத்துழைப்பை அளித்த பொறியாளர், மேலாளர், மற்றும் அனைத்து பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதலை தெரிவித்துக்கொள்வதுடன் எதிர்வரும் ஆண்டிலும் இந்நகராட்சி நிர்வாகம் நல்ல முறையில் இயங்கிட பூரண ஒத்துழைப்பு நல்கிடவேண்டும் என்ற எனது விருப்பத்தை தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆணையாளர்**
**ஜெயங்கொண்டம் நகராட்சி.**